# அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை

## Ang Mo Kio Tamil Methodist Church

***28th செப்டம்பர் / September 2025 ஞா யிறு ஆராதனை / Sunday Service***

† **ஆராதனைக்கு அழைப்பு** — **திரு. தாமஸ் பன்னீர் செல்வன்**
Call to Worship — Mr. Thomas Panneer Selvan

**இறைவணக்கப்பாடல்** — ***பாடகர் குழு***
Introit — Choir

**ஜெபம்** — **திரு. தாமஸ் பன்னீர் செல்வன்**
Prayer — Mr. Thomas Panneer Selvan

**தொடக்க பாடல்** — ***சபையார் இணைந்து***
† Opening Song — Congregation

**ஆண்டவா! பிரசன்னமாகி**

*1. ஆண்டவா! பிரசன்னமாகி*
*ஜீவன்' ஊதி உயிர்ப்பியும்,*
*ஆசை காட்டும் தாசர்மீதில்*
*ஆசிர்வாதம் ஊற்றிடும்*

**அருள்மாரி எங்கள்பேரில்**
**வருஷிக்கப் பண்ணுவீர்**
**ஆசையோடு நிற்கிறோமே**
**ஆசிர்வாதம் ஊற்றுவீர்**

*2. தேவரீரின் பாதத்தண்டை*
*ஆவலோடே கூடினோம்*
*உந்தன் திவ்விய அபிஷேகம்*
*நம்பிநாடி அண்டினோம்*

*3. ஆண்டவா மெய்பக்தர் செய்யும்*
*வேண்டுகோளை கேட்கிறீர்*
*அன்பின் ஸ்வாலை எங்கள்*
*நெஞ்சில்*
*இன்று மூட்டி நிற்கிறீர்*

*4. தாசர்தேடும் அபிஷேகம்*
*இயேசுவே கடாட்சியும்*
*பெந்தே கொஸ்தின் திவ்விய*
*ஈவை*
*தந்து ஆசீர்வதியும்*

***மாறி வாசித்தல் 39ம் ஞாயிறு*** — ***சபையார் இணைந்து***
† "சங்கீதம் 118" — Congregation

"களிகூர்ந்து மகிழக்கடவோம்"

Psalter Reading – "Psalm 118"

† **தந்தை போற்றி** — ***சபையார் இணைந்து***
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**
Thanksgiving & Pastoral Prayer

**பரமண்டல ஜெபம்** — ***சபையார் இணைந்து***
Lord's Prayer — Congregation

**சிறப்புப் பாடல்** — ***பாடகர் குழு***
Special Song — Choir

† ***காணிக்கைப் பாடல்*** — ***சபையார் இணைந்து***
Offertory Song — Congregation

**தெய்வன்பின் வெள்ளமே**

*1. தெய்வன்பின் வெள்ளமே, திருவருள் தோற்றமே,*
*மெய்ம் மனதானந்தமே!*
*செய்ய நின்செம்பாதம் சேவிக்க இவ்வேளை*
*அய்யா, நின்அடி பணிந்தேன்.*

*2. சொந்தம் உனதல்லால் சோர வழி செல்ல*
*எந்தாய் துணிவேனோ யான்?*
*புந்திக்கமலமாம் பூமாலை கோர்த்து நின்*
*பொற்பதம் பிடித்துக் கொள்வேன்.*

*3. பாவச் சேற்றில் பலவேளை பலமின்றித்*
*தேவே தவறிடினும்,*
*கூவி விளித்துந் தன் மார்போடணைத் தன்பாய்*
*யாவும் பொறுத்த நாதா!*

*4. மூர்க்ககுணம் கோபம் லோகம் சிற்றின்பமும்*
*மோக ஏக்கம் யாவும்*
*தாக்கிடத் தடுமாறித் தயங்கிடும் வேளையில்,*
*தூக்கித் தற்காத்தருள்வாய்,*

*5. ஆசை பாசம் பற்று ஆவலாய் நின்திருப்*
*பூசைப் பீடம் படைப்பேன்;*
*மோச வழிதனை முற்று மகற்றியேன்*
*நேசனே நினைத் தொழுவேன்.*

*6. மரணமோ, ஜீவனோ. மறுமையோ, பூமியோ,*
*மகிமையோ, வருங்காலமோ,*
*பிற சிருஷ்டியோ, உயர்ந்ததோ, தாழ்ந்ததோ*
*பிரித்திடுமோ தெய்வன்பை?*

† **பூலோகத்தாரே யாவரும்** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்**
Scripture Reading
***லூக்கா 12 : 13 – 20***
Luke 12 : 13 – 20

***திருமதி. அஜிதா ஆசிர்***
Mrs. Ajita Asir

***அருளுரை***
Sermon

***போதகர். ஜேசுதாஸ் சார்லஸ்***
Pastor. Jesudoss Charles

✝ ***அர்ப்பணகீதம்***
Offertory & Closing Song

***சபையார் இணைந்து***
Congregation

**வருவாய்! தருணமிதுவே**

***வருவாய்! தருணமிதுவே அழைக்கிறாரே***
***வல்ல ஆண்டவர் இயேசுவண்டை***

*1. வாழ் நாளையெல்லாம் வீண் நாளாய்*
*வருத்தத்தோடே கழிப்பது ஏன்?*
*வந்தவர் பாதம் சரணடைந்தால்*
*வாழ்வித்து உன்னைச்*
*சேர்த்துக்கொள்வார்*

*2. கட்டின வீடும் நிலம், பொருளும்*
*கண்டிடும் உற்றார் உறவினரும்*
*கூடுவிட்டு உன் ஆவி போனால்*
*கூட உன்னோடு வருவதில்லை*

*3. அழகும் மாயை நிலைத்திடாதே*
*அதை நம்பாதே மயக்கிடுமே*
*மரணம் ஓர் நாள் சந்திக்குமே*
*மறவாதே உன் ஆண்டவரை*

*4. வானத்தின் கீழே, பூமி மேலே*
*வானவர் இயேசு நாமம் அல்லால்*
*இரட்சிப்படைய வழியில்லையே*
*இரட்சகர் இயேசு வழி அவரே*

*5. தீராத பாவம், வியாதியையும்*
*மாறாத உந்தன் பெலவீனமும்*
*கோரக் குருசில் சுமந்து தீர்த்தார்*
*காயங்களால் நீ குணமடைய*

*6. சத்திய வாக்கை நம்பியே வா*
*நித்திய ஜீவன் உனக்களிப்பார்*
*உன் பேரை ஜீவ புஸ்தகத்தில்*
*உண்மையாய் இன்று எழுதிடுவார்*

***அறிவிப்புகள்***
Announcements

✝ ***மனப்பாட வசனம்***
Memory Verse
***எபேசியர் 6 : 6***
Ephesians 6 : 6

***சபையார் இணைந்து***
Congregation

***6. மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்***
Closing Prayer & Benediction

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ Indicates Congregation standing